IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO.147-2010**

Deposition PW 2 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 19.08.2025 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.நாகராஜ் | Father's Name : | திரு.திம்மராயப்பா |
| Village : | | Taluk : | |
| -- | | Calling : | |
| -- | | Age : | 70 |
| வா.சா. : | 2 | | |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | | |

**3, 4** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

**1.** வாதிகள் எனது உறவினர்கள் எனறால் சரிதான். இறந்துபோன 1ம் வாதி முனியப்பா எனது சித்தப்பா. வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. சர்வே எண்.50/1 எத்தனை உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் 50/1 ஏ, 50/1 பி. 50/1 சி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. 1914ம் ஆண்டு ஆவலமுனியப்பா, கிருஷ்ணப்பா, பைரப்பா, சொன்னன், சொன்னன்னன் ஆகியோருக்குள் பாகம் ஏற்பட்டது என்றால் சரிதான். அதைப்பற்றி எனக்கு தெரியும். அந்த பாகப்பத்திரத்தின் அடிப்படையில் சர்வே எண்.50/1 பிக்கு கிருஷ்ணப்பா பெயரில் பட்டா வந்த விவரம் தனக்கு தெரியுமா என்றால் 2010 ம் ஆண்டு தெரிந்தது. எனது அப்பாவும் இறந்துபோன 1ம் வாதியான எனது சித்தப்பாவும் 1912ம் ஆண்டு பாகம் பிரித்துக்கொண்டார்கள். சர்வே எண்.50/1 பியில் 3234 சதுர அடியை 1ம் பிரதிவாதி கிருஷ்ணப்பா ரோடு பஞ்சாயத்திற்கு எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2010 ஆண்டே தெரியும். கிருஷ்ணப்பாவுடன் வேறு யார் பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் தண்டுமுனியப்பா, பில்லப்பா, கிருஷ்ணப்பா ஆகியோர் எழுதிக்கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். மேற்சொன்ன தண்டுமுனியப்பா

மற்றும் பில்லப்பா ஆகியோரை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

2. முனியப்பா பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்த விவரங்கள் எனக்கு தெரியாது. கிருஷ்ணப்பா எழுதிக்கொடுத்த இடத்தில் ரோடு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. ரோடு போட வந்தததை முனியப்பா வகைராக்கல் தடுத்துவிட்டார்கள். நான் பொய் சொல்கிறேன் என்றாலும், வழக்கு சொத்து உட்பட 4 சர்வே எண்களில் ரோடு போடப்பட்டுள்ளது என்றால் தற்போது பொதுமக்கள் ரோட்டை பயன்படுத்துகிறார்கள் என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் வழக்கு சொத்தில் ரோடு உள்ளதா என்றால் ரோடு போடவில்லை வண்டிப்பாதை அளவில் தடம் உள்ளது. எனக்கு வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாது என்றாலும் வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிருஷ்ணப்பா தனக்கு பாத்தியப்பட்ட நிலத்தை தான் ரோட்டிற்காக தானம் கொடுத்துள்ளார் என்றாலும் நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை.</u>

(ஒம்/-ஆர்.நரசிம்மமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றைவியல்
நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்.